# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0155 /2015

ஆணை எண்: 113 /2016

நாள்: 23/06/2016

திரு. மு. மணி,
சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு),
வாணியம்பாடி. **மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
வாணியம்பாடி நகராட்சி. **எதிர் மனுதாரர்**

## ஆணை

மனுதாரர் 31.01.2015–ல் ஒய்வு பெற்ற தனக்கு ஓய்வூதியம் மற்றும் பணப்பலன்கள் மற்றும் பிற நிலுவை முன்பண இனங்கள் கிடைக்கப்பெறவில்லையென தனது 09.07.2015 நாளிட்ட முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பாக தாக்கல் செய்துள்ளார். இம்முறையீடு நிர்வாக ரீதியிலானதாக இருப்பினும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு–2 மற்றும் 3ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள குறைபாடுகள் ஏதும் இவ்விடத்தில் இடம் பெற்றுள்ளனவா என்பதனை பரிசீலிக்கும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தால் மேற்படி முறையீட்டினை எண்.0155 ஆக பதிவு செய்து அறிக்கைகள் பெற ஆணையிடப்பட்டது. வரப்பெற்றுள்ள அறிக்கைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

2. இம்முறை மன்ற ஆணைகளின்படி வாணியம்பாடி நகராட்சி ஆணையரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கை ந.க.எண்.2149/2015/சி.2 நாள்.11.05.2016–ல் மனுதாரருக்கு வழங்க வேண்டியிருந்த ஒட்டுமொத்த தொகை (Lumpsum) ரூ.50,000–/

வழங்கப்பட்டுவிட்டதெனவும் சேம நல நிதி, சிறப்பு சேமநல நிதி குறித்து பதிவேடுகளில் கணக்கு முடித்து தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், மாதாந்திர சிறப்பு ஓய்வூதிய பிரேரணை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதெனவும், மனுதாரரால் கோரப்பட்ட முன்பண செலவினங்கள் குறித்து ஆவணங்கள் சமர்ப்பித்திட கோரப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலும், இம்முறை மன்ற நடுவத்தின் 02.06.2016 நாளிட்ட அறிவிப்பாணைகளின் படி வரப்பெற்ற வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களது அறிக்கை (ந.க.எண்.674/16/பிஜி3 நாள்.14.06.2016) வரப்பெற்றுள்ளது. இவ்வறிக்கையில் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் உறுதி செய்யப்பட்டன. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண். 674/16/பிஜி3, நாள்.25.05.2016–ல் தனியருக்கு உரிய சிறப்பு ஓய்வூதியம் வழங்க அனுமதி ஆணையிடப்பட்டு, நிலுவைத் தொகையுடன் மனுதாரருக்கு ஓய்வூதியத்தினை விரையில் வழங்கிட நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தனது 27.05.2016 நாளிட்ட தனது கடிதத்தில் முறைமன்ற நடுவ நடவடிக்கைகளால் ஒட்டு மொத்த தொகை ரூ.50,000–/ம் கிடைக்கப்பெற்றதையும் பிற இனங்கள் குறித்த நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டதையும் இம்முறை மன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள அறிக்கைகளின் அடிப்படையில் இம்முறையீட்டின் மீதான நடவடிக்கையினை முடிக்கலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016–ம் ஆண்டு ஜூன் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஓம்/...

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப் பதிவாளர்

பெறுநர்:

1. திரு.மு.மணி,
   சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு),
   12, சுப்பராயன் தெரு, பெருமாள்பேட்டை,
   வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் – 635 752

2. நகராட்சி ஆணையர், வாணியம்பாடி நகராட்சி,
   வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் – 635 752.

3. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு),
   மாவட்ட ஆட்சியரகம், வேலூர் –9